**DANSE ET MUSIQUE - NIRMALA PATRICK GLEYSE**

**Le couple de danseurs, anciens étudiants du guru Muthuswamy Pillai participent à de nombreux spectacles lors de leurs fréquentes visites en Inde. Aujourd'hui, au Kalyana Mandapam de Madras, à l'occasion d'un mariage brahmine , ils ont commencé par un Mallari (raga kimbira natai). Le public, captivé par la précision et la richesse rythmique de leur danse, remplit immédiatement l'auditorium. Patrick, très beau danseur, interpréta Murugan Kautwam, (raga sanmukhapriya) en maîtrisant parfaitement tous les karanas (postures). Nirmala a exécuté à la perfection un Alarippu (khandajati triputa ) accompagnée par Haribabu au mridangam et M. Selvam aux talams. Leur varnam « Ananda Tandava », ainsi que le padam, poème dansé « Adinneye khannan » dansés ensemble, nous emmènent au cœur de la Tradition grâce à la maîtrise de leur abhinaya (théâtre dansé) et de leur technique rythmique. Le Tillana, (raga hindolam) exécuté par Patrick et Nirmala, dans des mouvements à la fois très rapides et très coulés, a suscité de nombreux applaudissements qui traduisaient le ravissement du public.........**

TRADUCTION D'ARTICLE INDIEN
TAMIL NADU - CHENNAI

பாட்டும் பரதமும்

நிர்மலா - பேட்ரிக்

முத்துகிருஷ்ணனின் மிருதங்கமும், சிவகணேசனின் வயலினும் நிகழ்ச்சியை பரிமளிக்கச் செய்தன.



மறைந்த குரு முத்துசுவாமி நட்டுவனாரின் மாணவ - மாணவிகளான நிர்மலா - பேட்ரிக் தம்பதியரின் பரதநாட்டிய நடன நிகழ்ச்சி ஏவி.எம். கல்யாண மண்டபத்தில் நடந்தது. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இந்த தம்பதியர் தற்சமயம் முத்துசுவாமி நட்டுவனாரின் புதல்வர் எம். செல்வத்திடம் தொடர்ந்து பரத கலையை கற்று வருகிறார்கள். நடன தம்பதியர் அடிக்கடி சென்னைக்கு வந்து நடன நிகழ்ச்சிகளை வழங்குவார்கள். கம்பீர நாட்டைராக மல்லாரியுடன் நிகழ்ச்சியை தொடங்கினார்கள். முதல் ஆட்டமே களை கட்டியது. அரங்கம் நிரம்பி வழிந்தது.

சண்முகபிரியா ராக முருக கவுத்துவத்திற்கு அருமையாக ஆடி முருக பெருமானின் பல நிலைகளை அழகுற சித்தரித்தார், பேட்ரிக்.

திஸ்ர அலாரிப்பை அழகாக ஆடினார் நிர்மலா. ஆனந்த தாண்டவம் என்ற வர்ணத்திற்கு இருவரும் அற்புதமாக ஆடி அவையோரின் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டனர். இருவரும் லயசுத்தத்துடனும், அங்க சுத்தத்துடனும் மரபு மாறாமல் ஆடியது வெகு சிறப்பு.

ஆடினாயே கண்ணா என்ற மோகன கல்யாணி ராக பாடலுக்கு இருவரும் பாவங்களுடன் நன்கு அபிநயித்தனர்.

இந்தோளம் ராக தில்லானாவை அனாயசமாக ஆடி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்கள், நிர்மலா - பேட்ரிக் தம்பதியர்.

குரு எம். செல்வத்தின் சிறப்பான நட்டுவாங்கமும், ஹரிபிரசாத்தின் இனிய பாடல்களும,